

# தினத்தந்தி (15.12.2023)



### புகழூர் காகித ஆலை சார்பில்

## குடிநீர் திட்டப்பணிகளுக்கு ரூ.19 லட்சம் வழங்கல்

நொய்யல், டிச.15-

புகழூர் காகித ஆலை சார்பில் சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் திருக்காடுதுறை ஊராட்சிக்குட்பட்ட கிராமமக்களின் குடிநீர் தேவைகளுக்காக புதிதாக குடிநீர் குழாய்கள் அமைப்பதற்காக ரூ.19 லட்சத்திற்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி புகழூர் காகித ஆலை பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

இதில், காகித ஆலை செயல் இயக்குனர் (இயக்கம்) சீனிவாசன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், பொது மேலாளர் (நிதி) ரங்கராஜன், முதுநிலை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு திருக்காடுதுறை ஊராட்சி தலைவர் அசோக் குமார், ஒன்றிய செயலாளர் வளர்மதி ஆகியோரிடம் ரூ.19 லட்சத்திற்கான காசோலையை வழங்கினர். அப்போது காகித ஆலை அதிகாரிகள் உடனிருந்தனர்.

## தினமலர் (14.12.2023)

# பொதுமக்கள் தாகம் தீர்க்க ரூ.19 லட்சம்

## வழங்கியது டிஎன்பிஎல்

**வேலாயுதம்பாளையம், டிச. 14–**

புகழூர் டிஎன்பிஎல் நிறுவனம் தமது சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பொது மக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு களுக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகிறது.

அதன்படி திருக்காடுதுறை ஊராட்சிக்கு உட்பட்ட ஆலமரத்து மேடு முதல் புகழூர் தீயணைப்பு நிலையம் வரையும், நடையனூர் முதல் இளங்கோ நகர் வரையும், திருக்காடுதுறை பிரிவு முதல் நொய்யல் வேலாயுதம்பாளையம் மெயின் ரோடு வரையும் உள்ள பொது மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்றும் வகையில், புதிதாக குடிநீர் குழாய் அமைக்க நிதி உதவி அளிக்க டிஎன்பிஎல் நிறுவனம் முடிவு செய்தது.

அதன் அடிப்படையில் டிஎன்பிஎல் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் டிஎன்பிஎல் செயல் இயக்குனர் சீனிவாசன், பொது மேலாளர்கள் (மனித வளம்) கலைச்செல்வன் (நிதி) ரங்கராஜன், முதுநிலை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார் ஆகியோர் கரூர் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வளர்மதி, திருக்காடு துறை ஊராட்சித்தலைவர் அசோக்குமார் ஆகியோரிடம் ரூ.19 லட்சத்திற்கான காசோலையை வழங்கினர்.



திருக்காடுதுறை ஊராட்சிக்கு உட்பட்ட பொதுமக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில் அதன் செயல் இயக்குனர் சீனிவாசன், பொது மேலாளர்கள் (மனித வளம்) கலைச்செல்வன் (நிதி) ரங்கராஜன், முதுநிலை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார் ஆகியோர் கரூர் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வளர்மதி, திருக்காடுதுறை ஊராட்சித் தலைவர் அசோக்குமார் ஆகியோரிடம் ரூ.19 லட்சத்திற்கான காசோலை வழங்கினர்.

**தினமணி (14.12.2023)**

# திருக்காடுதுறை ஊராட்சியில் குடிநீர் திட்டப் பணிகளுக்கு டிஎன்பிஎல் நிதி



திருக்காடுதுறை ஊராட்சிக்கு குடிநீர் குழாய் அமைப்பதற்கான காசோலையை ஊராட்சி மன்றத்தலைவர் என்.அசோக்குமாரிடம் புதன்கிழமை வழங்கிய டிஎன்பிஎல் ஆலை அதிகாரிகள்.

**கரூர், டிச.13:** திருக்காடுதுறை ஊராட்சியில் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு டிஎன்பிஎல் ஆலை சார்பில் ரூ.19 லட்சம் புதன்கிழமை வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம் புகழூர் வட்டத்திற்குள்பட்ட திருக்காடுதுறை ஊராட்சியில் குடிநீர் திட்டப்பணிகளுக்கு புதியதாக குழாய்கள் அமைக்கும் பணிக்கு டிஎன்பிஎல் ஆலை சார்பில் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.19 லட்சம் வழங்கும் நிகழ்ச்சி புதன்கிழமை ஆலை வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) ஆர்.சீனிவாசன், பொது மேலாளர் (மனிதவளம்)கே.கலைச்செல்வன், பொதுமேலாளர்(நிதி) ஆர்.ரெங்கராஜன், முதுநிலை மேலாளர்(மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார் ஆகியோர் ரூ.19 லட்சத்துக்கான காசோலையை ஊராட்சி மன்றத்தலைவர் என்.அசோக்குமார், ஊராட்சியைச் சேர்ந்த வளர்மதிசிதம்பரம் ஆகியோரிடம் வழங்கினர்.

**தினகரன் (14.12.2023)**

### தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் வழங்கியது

# குடிநீர் திட்ட பணிக்கு ரூ. 19 லட்சம் நிதி

வேலாயுதம்பாளையம், டிச. 14: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் குடிநீர் திட்ட பணிக்கு ரூ, 19 லட்சம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு கிராமங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறது. ஒன்றாக, கரூர் மாவட்டம், புகழூர் வட்டம், திருக்காடுதுறை ஊராட்சி ஆலமரத்து மேடு முதல் தீயணைப்புத் துறை அலுவலகம் வரையும், நடையனூர் முதல் இளங்கோ நகர் வரையும், திருக்காடுதுறை பிரிவு முதல் நொய்யல்-வேலாயுதம்பாளையம்ரோடு வரையும் உள்ள கிராம மக்களின் குடிநீர் தேவைகளுக்காக புதிதாக குடிநீர் குழாய்கள் அமைப்பதற்காக ரூ.19. லட்சம் வழங்கும் விழா தமிழ்நாடு செய்தித்தாள் நிர்வாக அலுவலகத்தில் நடைபெற்றது.

காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்)- ஆர் .சீனிவாசன், பொதுமேலாளர் (மனிதவளம்) கே கலைச்செல்வன், பொது மேலாளர் (நிதி) ஆர் ரெங்கராஜன் மற்றும் முதுநிலை மேலாளர் (மனிதவளம்) கே. எஸ் .சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு ரூ.19,00,000/-ற்கான காசோலையை கரூர் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வளர்மதி சிதம்பரம், ராட்சித் தலைவர் அசோக்குமார் ஆகியோரிடம் வழங்கினார். நிறைவாக காகித ஆலை மக்கள் தொடர்பு மேற்பார்வையார் ராஜா நன்றி கூறினார்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2021-2023 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 14-12-2023 (வியாழக்கிழமை) 8 பக்கம் ₹ 5 ★ மலர் 46 இதழ் 362

TRICHY 14-12-2023 (THURSDAY) 8 PAGES ₹5 VOL: 46 ISSUE: 362



திருக்காடு துறை ஊராட்சி பகுதிகளில் குடிநீர் பணிக்காக ரூ19 லட்சத்திற்கான காசோலையை காகித ஆலை நிறுவன அதிகாரிகள் வழங்கிய போது எடுத்த படம்.

### தமிழ்நாடு காகித ஆலை சார்பில்

# திருக்காடுதுறை ஊராட்சி குடிநீர் திட்ட பணிகளுக்காக ரூ.19 லட்சம் நிதி உதவி

வேலாயுதம்பாளையம், டிச.14—

கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தின் சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நலத்திட்ட உதவிகளில் ஒன்றாக திருக்காடுதுறை ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆலமரத்து மேடு முதல் தீயணைப்புதுறை அலுவலகம் வரையும், நடையனூர் முதல் இளங்கோ நகர் வரையும், திருக்காடுதுறை பிரிவு முதல் நொய்யல்—வேலாயுதம்பாளையம் சாலை வரையும் உள்ள கிராம மக்களின் குடிநீர் தேவைகளுக்காக புதிதாக குடிநீர் குழாய்கள் அமைப்பதற்காக ரூ.19 லட்சத்திற்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவன பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தின் செயல் இயக்குனர் (இயக்கம்) சீனிவாசன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், பொது மேலாளர் (நிதி) ரங்கராஜன், முதுநிலை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார் ஆகியோர் ரூ19 லட்சத்திற்கான காசோலையை திருக்காடுதுறை ஊராட்சி தலைவர் அசோக்குமார், ஒன்றிய செயலாளர் வளர்மதி ஆகியோரிடம் வழங்கினார்கள். நிகழ்ச்சியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவன அதிகாரிகள் உடன் இருந்தனர்.

GM-HR
For perusal please.

16/12

**இந்து தமிழ் திசை (16.12.2023)**



கரூர் டிஎன்பிஎல் நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருக்காடுதுறை ஊராட்சியில் புதிதாக குடிநீர் குழாய் அமைப்பதற்காக ரூ.19 லட்சத்துக்கான காசோலையை வழங்கிய காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் எப்ஏசிஆர்.சீனிவாசன், பொது மேலாளர்கள் கே.கலைச்செல்வன், ஆர்.ரெங்கராஜன், முதுநிலை மேலாளர் கே.எஸ்.சிவக்குமார் ஆகியோர்.

### திருக்காடுதுறை ஊராட்சியில் குடிநீர் குழாய் அமைக்க

# டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில் ரூ.19 லட்சம் நிதியுதவி

● கரூர்

திருக்காடுதுறை ஊராட்சியில் புதிய குடிநீர் குழாய் அமைக்க டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில் ரூ.19 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

கரூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின்(டிஎன்பிஎல்) சமூக மேம்பாட்டு திட்டத்தில் (சிஎஸ்ஆர்) வழங்கப்படும் நலத் திட்ட உதவிகளின் கீழ், கரூர் மாவட்டம் புகழூர் வட்டம் திருக்காடுதுறை ஊராட்சிக்கு உட்பட்ட ஆலமரத்துமேடு முதல் தீயணைப்பு நிலையம் வரையும், நடையனூர் முதல் இளங்கோநகர் வரையும், திருக்காடுதுறை பிரிவு முதல் நொய்யல் வேலாயுதம் பாளையம் சாலைவரையும் உள்ள பகுதிகளில் மக்களின் குடிநீர் தேவைக்காக புதிதாக குடிநீர் குழாய்கள் அமைப்பதற்காக ரூ.19 லட்சத்துக்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி டிஎன்பிஎல் பயிற்சி மையத்தில் அண்மையில் நடைபெற்றது.

காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர்(இயக்கம்) எப்ஏசிஆர்.சீனிவாசன், பொது மேலாளர்(மனிதவளம்) கே.கலைச்செல்வன், பொது மேலாளர்(நிதி) ஆர்.ரெங்கராஜன், முதுநிலை மேலாளர்(மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார் ஆகியோர் பங்கேற்று ரூ.19 லட்சத்துக்கான காசோலையை, திருக்காடுதுறை ஊராட்சி மன்றத் தலைவர் என்.அசோக்குமார் மற்றும் திருக்காடுதுறை ஊராட்சியைச் சேர்ந்த வளர்மதி சிதம்பரம் ஆகியோரிடம் வழங்கினர். ●